[2016 ஜூன் 20

- சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி
- அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம்
- திருமண உதவித் திட்டங்களின்கீழ், திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் நான்கு கிராமிலிருந்து எட்டு கிராமாக உயர்வு
- கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்வு
- டாஸ்மாக்மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்ததுடன், 500 கடைகளை மூடவும் ஆணை

என ஐந்து அரசாணைகள் உடனடியாக வெளியிடப்பட்டுள்ளன.

4. அரசு நிருவாகத்தின் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்த உறுதிகொண்டுள்ள இந்த அரசு, லோக்பால் சட்டத்தில் குறிப்பிட்ட சட்டத் திருத்தங்களுக்கு பாராளுமன்றம் சட்டம் இயற்றியவுடன், உரிய சட்ட வரைமுறையை வகுத்து, தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா என்ற அமைப்பை நிறுவும்.

5. நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வரி விதிக்கும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் அதிகமாகக் குவிந்துள்ள நிலையில், இன்றியமையாத பல பொதுச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பும், கடமையும் மாநிலங்களிடமே உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். நிதி ஆதாரப் பகிர்வு மத்திய அரசுக்கு சாதகமாக இருக்கக்கூடிய இச்சூழ்நிலையில், ஏற்றுள்ள பொறுப்புகளுக்கு போதிய நிதி ஆதாரங்களின்றி மாநில அரசு செயல்பட வேண்டியுள்ளது. எனவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மத்திய அரசுடன் இணைந்து செயல்படும் அதேவேளையில், மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கிடையே நியாயமான நிதிப் பகிர்வு முறை கடைபிடிக்கப்பட வேண்டும் என இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.